# ஊடக வெளியீடு

## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP): ஏப்ரல் 2017

## தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

**தொலைபேசி : 011-2147401** **தொ.நகல்: 011-2147412** **ஜூன் 12, 2017**

வெளியிடப்பட்ட IIP பெறுமதிகளின் படி, திணைக்கள பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஏ.ஜே.சத்தரசிங்க, இச்சுட்டெண்ணை வெளியிடுதல் சம்பந்தமான அறிக்கையில் குறிப்பிடுகையில், 2016ஆம் ஆண்டின் மாதாந்த உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் 2017 ஏப்ரல் மாத உற்பத்தியில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 1.8% ஆல் அதிகரித்துள்ளது.

கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது (IIP) மிக முக்கியமான குறிப்பிட்ட பொருளாதார குறிகாட்டியாக உள்ளதுடன் அதன் முக்கிய நோக்கம் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் கைத்தொழில் உற்பத்தியின் அளவில் ஏற்படும் குறுகிய கால மாற்றங்களை வெளிக்கொணர்வதாகும். இது பொருளாதார அபிவிருத்தியின் திருப்புமுனைகளை ஆரம்ப கட்டத்தில் அடையாளங்காண பயன்படுகின்றது. DCS 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து மாதாந்த IIP குறிகாட்டியை வெளியிடுவதுடன் இந்நாளிலிருந்து 42 நாட்கள் இடைவெளியில் மாதாந்த அடிப்படையில் இச்சுட்டி வெளியிடப்படுகின்றது. தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP) தொகுக்கப்பட்டது.

உற்பத்திக் கைத்தொழில்களில், 2016ஆம் ஆண்டு ஏப்ரல் மாத உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் 2017 ஏப்ரல் மாத உற்பத்தியில், ‘தளபாடம்’ (27.8%), ‘ஏனைய உலோகமல்லாத தாதுப் பொருட்கள் உற்பத்தி’ (10.4%) மற்றும் ‘ஆடை அணிகலன்கள்’ (10.2%) என்பன 2016இன் ஏப்ரல் மாத உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாத உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டுகின்றது. உணவு உற்பத்தியானது ஏப்ரல் மாதத்தில் 0.1% ஆல் அதிகரித்துள்ளது.
‘மரம் மற்றும் மரம் சார்ந்த உற்பத்திகள்’ (22.3%) மற்றும் இரசாயனமும் இரசாயனப் பொருள் உற்பத்தியும் (9.8%) மற்றும் ‘புகையிலை உற்பத்தி’ (8.6%) ஆகியன வீழ்ச்சியைக் காட்டுகின்றன.

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)**

| மாதம், வருடம் | சுட்டெண் பெறுமதி |
|---|---|
| ஏப்ரல் - 2016 | 97.0 |
| ஏப்ரல் - 2017 | 98.7 |
| வருடத்தின் வருட மாற்றம் (%) | 1.8 |

2017 ஏப்ரலின் மாதாந்த, கைத்தொழிற் சுட்டெண் பற்றிய மேலதிக விபரங்களுக்கு www.statistics.gov.lk/Industries இணையத்தை பார்க்குமாறு திணைக்ககளம் தெரிவித்துள்ளது.